எங்கள் தந்தையாகிய இறைவா,

கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபை என்னும் மறைபொருளில் இயேசுவின் தாயாகிய மரியன்னை பெற்றுள்ள இடத்தையும் கூர்ந்தறிந்து உய்த்துணரும் ஆற்றலை பிராங்க் டஃப் என்னும் உம் அடியார்க்கு அளித்தருளினீர்.

இந்த கருத்தறிவுத் திறனை பிறரோடு பகிர்ந்து கொள்ளும் ஆவலுடன் மரியன்னை மீது குழந்தைக்குரிய பற்றுதல் கொண்டு அவர் மரியாயின் சேனையைத் தோற்றுவித்து உலகின் மீது அவள் கொண்ட அன்னைக் குரிய அன்புக்குச் சான்றாகவும் திருச்சபையின் நற்செய்திப் பணிக்காக அவளுடைய பிள்ளைகள் அனைவரையும் ஒன்றிணைக்கும் கருவியாகவும் அதை அமைத்தார்.

தந்தையே நீர் அவர்மீது பொழிந்த அருள்வரங்களுக் காகவும் அவர்தம் வீரமிக்க ஒளி தரும் விசுவாசத்தினால் திருச்சபை பெற்றுக் கொண்ட நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம்.

உமது திருமுன் நாங்கள் ஒப்புக் கொடுக்கும் இம்மன்றாட்டை அவர்தம் பரிந்துரையால் ஏற்று எங்களுக்கும் தந்தருளுமாறு நம்பிக்கையுடன் உம்மை கெஞ்சிக் கேட்கிறோம்.

உமது திருவுளத்திற்கு இது ஏற்புடையதாயின் அவர் தம் வாழ்க்கையின் புனித தன்மையை உமது திருப்பெயரின் மகத்துவத்திற்காகத் திருச்சபை ஏற்று அங்கீகரிக்க வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.